சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி ஊ தவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த ஒன்றிய அரசின் 75% பங்கு தொகை ரூ. 34,83,13,000/- மற்றும் மாநில அரசின் 25% பங்கு தொகை ரூ.11,61,04,000/- சேர்த்து மொத்தம் ரூ. 46,44,17,000/- தொகையை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை

அரசாணை (ப) எண். 105

நாள் : 01.07.2026,
பராபவ வருடம்,
ஆனி மாதம் 17 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2057.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (ப) எண்.241, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 3)துறை, நாள். 18.11.2025.
2. அரசு கடித ந.க.எண். 2048/ADW3/2026-1, நாள். 23.05.2026.
3. அரசு துணைச் செயலாளர் (பட்ஜெட்), நிதித் துறை, கடித எண் E-27/Finance(GBC/BGM)/2024, நாள். 06.05.2026.
4. ஒன்றிய அரசின் பழங்குடியின அமைச்சக கடிதம் எண் 12410/JS&FA/2026, நாள். 16.06.2026.
5. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண். பமே/ஏ1/3293/2026, நாள் : 22.06.2026.

.....

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2025-2026 ஆம் கல்வியாண்டில் போஸ்ட் மெட்ரிக் கல்வி ஊ தவித் தொகை திட்டத்தின் கீழ் பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி ஊ தவித் தொகை வழங்க ரூ.8,74,56,000 னை (ரூபாய் எட்டு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரம் மட்டும்) ஒப்பளிக்கப்பட்டு அத்தொகையினை இத்திட்டத்திற்கான தனித்த வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைத்து செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், பழங்குடியினர் மாணாக்கருக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி ஊ தவித் தொகை திட்டத்தின் கீழ் முந்தைய வருட (2025-26) நிலுவை மற்றும் 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு

ஒன்றிய அரசின் பங்கு தொகை (75%) ரூ. 10727.30 இலட்சம் கீழ்கண்டவாறு விடுவிக்குமாறு ஒன்றிய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

	விவரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	2026-27 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் செலவினம்	7800.00
2.	மாநில அரசின் பங்கு (25%)	1950.00
3.	ஒன்றிய அரசின் பங்கு (75%)	5850.00
4.	2024-25 மற்றும் 2025-26 ஆம் ஆண்டிற்குரிய ஒன்றிய அரசின் பங்கு தொகை (75%) 1. 2024-25 மற்றும் 2025-26 மாநில அரசுக்கு நேர் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.3270.40 2. 2024-25 மற்றும் 2025-26 நிலுவை விண்ணப்பங்களுக்கான தொகை ரூ.1606.90	4877.30
5.	ஒன்றிய அரசின் மொத்த பங்கு தொகை (வ. எண்.3 + 4)	10727.30

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2026-27 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை (75%) ரூ.42,86,00,000/-னை (ரூபாய் நாற்பத்து இரண்டு கோடி எண்பத்து ஆறு இலட்சம் மட்டும்) முதன்மை ஒப்புதலாக (Mother Sanction) பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட முதன்மை ஒப்புதலுக்கேற்ப (Mother Sanction), 2026-2027 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக மாநில அரசின் 25% பங்குத் தொகையாக ரூ.14,28,66,667/- தேவைப்படுகிறது எனவும், இதன் மூலம் மொத்தம் ரூ.57,14,66,667/- (ரூபாய் ஐம்பத்து ஏழு கோடியே பதினான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மட்டும்) கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

முதன்மை ஒப்புதல் (Mother Sanction)	பங்குத் தொகை	தொகை (ரூ)
Post-Matric Scholarship – TN40	ஒன்றிய அரசின் பங்கு (75%)	42,86,00,000/-
	மாநில அரசின் பங்கு (25%)	14,28,66,667/-
	மொத்தம்	57,14,66,667/-

5. மேலும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, 2026 2027 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தினைச் செயல்படுத்த தேவையான தொகை, "DPC: 2225-02-277-UA-31202" என்ற ஒற்றை கணக்குத் தலைப்பின் கீழ் பெறப்பட்டு செலவிட அனுமதிக்கப்பட வேண்டும் என்பதால், ரூ. 57,14,66,667/-னை ஒற்றைக் கணக்குத் தலைப்பின் கீழ் மறு ஒதுக்கீடு (Re-appropriation) செய்து வழங்குமாறும் மற்றும் SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்து அரசாணை வெளியிடுமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

6. 2026-27 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் (B.E 2026-27) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை (Post-Matric Scholarship) திட்டத்திற்காக கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பங்குத் தொகை	கணக்குத் தலைப்பு	தொகை (ரூ)
ஒன்றிய அரசின் பங்கு (75%)	2225-02-277-UA-31202	34,83,13,000/-
மாநில அரசின் பங்கு (25%)	2225-02-277-UB-31202	11,61,04,000/-
	மொத்தம்	46,44,17,000/-

7. மேலே பத்தி 4 மற்றும் 5- இல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த 2026 27 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் மதிப்பீட்டில் (B.E 2026-27) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை (Post-Matric Scholarship) திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றிய அரசின் 75% பங்கு தொகை ரூ.34,83,13,000/- மற்றும் மாநில அரசின் 25% பங்கு தொகையாக ரூ. 11,61,04,000/- சேர்த்து மொத்தம் ரூ. 46,44,17,000/- (ரூபாய் நாற்பத்தாறு கோடியே நாற்பத்திநான்கு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) முதற்கட்டமாக பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை வழங்க விடுவித்து, அத்தொகையினை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், கூடுதலாக கோரப்படும் தொகை ரூ. 10,70,49,667/- (ரூபாய் பத்து கோடியே எழுபது இலட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று அறுபத்தேழு மட்டும்) நிதி ஒடுக்கீடு பெற்ற பின் விடுவிக்கப்படும்.

8. மேலே பத்தி 7 - இல் அனுமதிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் 277 கல்வி - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் UA பழங்குடியினர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு கல்வி உதவித் தொகை - 312 - படிப்புதவித்தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 02 - மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு.

DPC 2225 02 277 UA 31202

9. மேலே, பத்தி 7- ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.11,61,04,000/- 2026-2027-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் 2225 02 277 UB 31202 எனும் கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 2225 02 277 UA 31202 எனும் கணக்கு தலைப்பிற்கு மறு நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி ஒதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2026-2027 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கத்தில் மேற்கண்ட கணக்கு தலைப்புகளில் செய்யப்பட்ட நிதி மாற்றங்களை சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

Centrally Sponsored Scheme Code and Name

Centrally Sponsored Scheme and Name	3373 – POST MATRIC SCHOLARSHIP - TRIBAL
State Scheme Code and Name	TN40 – POST MATRIC SCHOLARSHIP – TRIBAL – 3373 (TN)
State Drawing Account No. In Reserve Bank of India	01512701456

10. மத்திய அரசின் நிதி சார்ந்த வழிகாட்டுதல்களின் படி கட்டாயமாக்கப்பட்டுள்ள SNA-SPARSH என்னும் புதிய நிதி தொகுப்பின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தில், எந்த ஒரு கணக்குத் தலைப்பின் கீழ் 100 சதவீதம் நிதியை பெறுவதற்கு SNA-SPARSH platform பட்டியல் மூலம் IFHRMS-ல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதில், மத்திய மற்றும் மாநில அரசின் பங்கீடானது கணினி வழியாக தன்னிச்சையாக பிறப்பிக்கப்படும் (இதன் பின்னர், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கென்று தனித்தனியான கணக்குத் தலைப்பு என்னும் முறை இல்லை).

11. இத்திட்டத்தின் கீழான, அனைத்து மாவட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் ஒப்புதல் அளிக்கப்படும் தொகையானது, அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்க கூடாது என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும், அரசு கடிதம் 573, நிதி(PFMS)த் துறை, நாள்.06.01.2025 மற்றும் 17.02.2025-இல் வழங்கப்பட்டுள்ள SNA-SPARSH வழிகாட்டுதல்களை தவறாது பின்பற்றும்படியும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பத்தி 3-5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுதி செய்துகொள்ளும்படியும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. மேலும் இந்நேர்வுக்காக தேவைப்படும் தொடர் செலவினத்தை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு பெற்று செலவினம் மேற்கொள்ளுமாறு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

13. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2675/நிதி(ஆதி(ம)பந)துறை/2026, நாள்:01.07.2026-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது, மேலும், இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2026070195

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர். என். சுப்பையன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 600 005.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை - 600 005.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை - 600 009.

நகல்

மாண்புமிகு சமூகநீதித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் தனிச் செயலர், சென்னை - 600 009.
நிதித்(ஆதி(ம)பந/வ.செ.போ-2)துறை, சென்னை - 600 009.
இருப்பு கோப்பு / ஃ பரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

01/07/2026
பிரிவு அலுவலர்

1/7/2026